சுவரில் சாய்ந்திருந்த சுரேசின் தாவாங்கட்டையைப் பிடித்து வாயை வலுக்கட்டாயமாகத் திறக்கவைத்துத் தண்ணீரை ஊற்றினாள். பாதி உள்ளேயும் பாதி வெளியேயுமாய் வழிந்துபோனது.

“ஐயோ..எம்புள்ளக்கிப் பேச்சில்ல..சிரிப்பில்ல..அம்மா ஆத்தான்னு குரல் இல்ல.

**அள்ளி வச்ச மண்ணாட்டம்**
**அப்படியே கெடக்கானே**
**தள்ளி வச்ச கல்லாட்டம்**
**தடுமாறிக் கெடக்கானே...**

- மாரிலடித்து அழுதாள். சுரேசை இறுக்கிப் பிடித்து கன்னத்தில் முத்தி அழுதாள். கண்ணணீரும் மூக்குச்சளியுமாய் முகத்திலிருந்து வழிய. ஏழ்மைத் தாயின் பாசத்துக்கு..வறுமை வரையறை போடமுடியுமா? இவளின் வருத்தமோ..அழுகையோ சுரேசுக்குப் புரியவேயில்லை.

“த்தே..என்னடி ஆயிப் போச்சு? பிலாக்கணம் பாடுதியே..ஒரு வாய்க் கஞ்சி மிச்சம்னு நெனைச்சுக்க..”

“த்தூ.. நீயும்..ஒன்னோட பன்னாடை நெனப்பும்..மவனுக்கு மருந்து மாத்திரை வாங்கித் தரத் துப்பில்ல.. ஆசுபத்திரிக்கு இட்டுப் போவ ஆளுபடை இல்ல. அக்கறையா கவனிக்க ஆருக்கும் பொளுதில்ல. ரத்தக் கண்ணீரு வடிக்கேன். கஞ்சி மிச்சம்கறியே தூத்தேறி.. எங்கஞ்சிக் கடோசி சொட்டு வரைக்கி எம்புள்ளக்கித் தருவம்யா.. நீயெல்லாம் ஒரு அப்பனாங்காட்டியும் .. பன்னாடை”

“ என்னாடி பயாஸ்கோப்பு காட்டுத?ம்? பைசா செலவு பண்ணா சரியாயிடுமா? பிரம்மனே வந்தாங்காட்டியும் ஒண்ணும் பண்ண முடி-யாது. நாம பண்ற நாறத்தொளிலோட தலையெழுத்து. ஓங்கண்ணங்காரன் பித்துப் பிடிச்சி ஓடல்லியா? எங்கப்பன் கண்ணு அவிஞ்சு போவல்லியா? நடமாட்டமே இல்லாம நா முடங்கிப் போவலியா? நமக்குன்னு பாடு பேச யாரு இருக்கா? பரிஞ்சு பேசத்தான் யாரு இருக்கா? நாமல்லாம் நரகல் சென்மம். விடிவு காலம் இல்லாத பொறப்பு. யாரு நல்லது பண்ணுவா நமக்கு? எவனாச்சும் மண்டயப் போட மாட்டானா? கஞ்சிக்கு நாலு காசு கெடைக்காதா? காக்கா பலவாரம் திங்கமாட்டாமான்னு அல்லாடற தெரு நாயுங்க. அரிச்சந்திரன் காலத்துலேர்ந்தே நாமன்னா எளக்காரம்தே. இத்தினி பேரை நல்லபடியா எரிச்சு சாம்பல் சேத்துக் குடுக்கறமே. நாளைக்கே.. நானு மண்டையப் போட்டாக்கூட..என்னை எரிக்கவும் காசு கேக்கும் கவன்மெண்டு”.





எத்தனை வருஷக் கோபமோ? ஆதங்கமோ? திருதிருவெனக் கொட்டினான் இருசப்பன். அக்கம் பக்கத்துக் குடிசைகளிலிருந்து தலைகள் ஒரு நிமிடம் எட்டிப் பார்த்து “ப்ச..எப்பவும் போல ஏச்சும் பேச்சுதான..” சுவாரஸ்யமில்லாமல் நகர்ந்தன.

குடிபோதை தெளிய ஆரம்பித்தது தாத்தாவுக்கு.

“ம்..அழான்..அழான்ல..ஏய்..”

எந்த மொழியிலும் சேராத சாராய மொழி பேசிப் பினாத்தினார். புரண்டு படுத்தார்.

“கண்ணு அவிஞ்சு போனாக் கூடக் கனாக் காணுது கிழம். எழுந்துச்சுன்னா- கஞ்சி எங்கன்னு தான் கேக்கும்..”

முனியம்மாவுக்கு வயித்துப் பாட்டுக் கவலை.

“ஆமா.... ராணி எங்கன? ஆளக் காணோம்..?”

“க்கும். பாதகத்தி எங்க ஒளிச்சாளோ? ஒரு நிமிசம் கூட வீடு தங்கறதில்ல. அக்கம் பக்கத்தூட்டுப் பொண்ணுகளோட ஆட்டம்தேன்.. தாழாங்குப்பத்துல இவ காலு படாத எடமே இல்ல. அவ்ளோ சுத்து. எவங்கைலயாச்சும் புடிச்சுக் குடுக்கறதுக்குள்ள இவளைக் காபந்து பண்றது - தாவுதீந்துடுது. நாலுபேரு பல்லுப் போட்டுப் பேசற மாதிரி அலைஞ்சா- கொண்டாங்குடுத்தான் வீட்டுல என்னாடின்னு கேப்பானுவளே..”

வறண்ட அரையடித் தலைமுடியை வறட்வறட்டென்று தட்டி கோடாலி முடிச்சுப் போட்டாள். முந்தானையால் முகத்தை அழுத்தித் துடைத்தாள். குளிக்காமல், துவைத்த புடவை கட்டாமல் ஒரே நாற்றம். அழுக்கும், வீச்சமும் இல்லாமலிருந்தால் தான் கஷ்டம் என்பது மாதிரியான வாழ்க்கை.

“உக்காந்து பாடு பேசிட்டே கெடக்கலாம். மாரியம்மா வூட்டுல ஆளாக்கு நொய்யி வாங்கியாறேன்..”

கிளம்பி.. அந்தப் பக்கம் நகர்ந்தாள்.

இந்த வழியாக டுர்ரென்று மொபெட்டில் இறங்கினான் சின்னராசு.

“ம். . . .நல்லாத் தின்னுப்பா முட்டைப் பொரியல் புடிக்குமில்ல? போட்டுக்க. எத்தினி நாலு களிச்சுச் சோத்தைக் கண்ணுல பாக்கீக? மட்டன் பிரியாணி சுரேசுக்கு ரொம்ப இஸ்டம் பாரேன். அலங்க மலங்க முளிச்சிட்டுக் களிமண்ணு கணக்கா உக்காந்திருக்கான். இவந் தலைஎளுத்து அம்புட்டுத்தேன். அதான் இந்த சோலியே வேணாம்னுட்டு ஓடியே போயிட்டன்...”

தம்பியை ஆசையாய்த் தடவிக் கொடுத்தான் சின்னராசு. பதினெட்டு வயசுப் பையனாகவா இருக்கிறான் தம்பி? உணர்வில்லை உணர்ச்சியில்லை

பசியில்லை தாகமில்லை மூச்சு மட்டும் மேலும் கீழுமாய்...வெட்டிப் போட்ட மரக்கட்டை மாதிரி ஒரே இடத்தில் கிடப்பு...உடம்பொறந்த பாசம் சின்னராசுவுக்குக் கண்ணீர்.

"பேராண்டி போடற பிரியாணி. எம்பேராண்டி....எவடி சொன்னா சின்ராசு தண்டச்சோறுன்னு.. ராசாடி எம்பேராண்டி.. .."

தாத்தா பாதி கிறக்கமும் பாதி முழிப்புமாய் அவுக்அவுக்அவுக்கென்று தின்றார். கண் தெரியாமல் அலுமினியத் தட்டில் தடவிப் பார்த்து [illegible] எலும்பாய் எடுத்துக் கடித்தார்.

இருசப்பனுக்கும் கண்ணிலும் மூக்கிலுமாய் நீர் வழிந்தது. ஆனாலும் வாய்கொள்ளாத அளவுக்குப் பெரிய பெரிய கவளமாய்த் திணித்துக் கொண்டான்.

"ஆமா..இம்புட்டு நாளா எங்கன காணாடைஞ்சுட்ட அப்பன் ஆத்தா உசிரோட இருக்கமான்னு எட்டிப் பாத்தியா?."

ஒவ்வொரு விரலாய்ச் சப்பினான் இருசப்பன்.

"அட..என்னப்பா...நீ? கவுன்ஸிலரு ஐயாவுக்கு இப்பல்லாம் நாந்தேன் நிழலு. அல்லா நேரமும் நா இல்லாம ஒண்ணுமே ஓடாது..அம்புட்டுக்கு ஆயிப் போச்சு. எலக்சன் வேற வருதா மூச்சு விட நேரமில்ல..க்கும்..வரல்ல போவலேன்னு பொலம்பாத இப்பத்தேன் ஒரு பிடிமானம் கெடைச்சிருக்கு. புடிச்சு மேல வர வேணாமா குச்சுக்குள்ளாறவே அடைஞ்சு கிடந்தா உன்ன மாதிரி பொணந்தேன் கூடஞ்சு சுரேசு மாதிரி பித்துப் புடிச்சுத்தேன் உக்காரணும்...வேணாம்னுதான் வேற லைன்ல போறேன்.."

கண்முழுசும் பெரிசாய்க் கனவுகள் சின்னராசுவுக்கு.

பிரியாணி வாசனையை மோப்பம் பிடித்து வாசலில் ஐந்தாறு நாய்கள் குலைத்துக் கொண்டும், வாலைத் தழைத்துக் கொண்டும் சுற்றி வந்தன.

வாஸ்தவம்தான். சின்னராசு..கவுன்ஸிலருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிவிட்டான். இருபத்துநாலு மணி நேரமும் கூடவே இருந்து அங்கே இங்கே நகராமல் கைக்காரியத்தில் உதவி செய்தான். அரசியலில் மேலே வர எடுபிடியாய்த் துவக்கத்தில் இருப்பது அவசியம் தானே..?

தாழாங்குப்பத்துக்குத் தார்ச் சாலைபோட வேண்டுமென்று ஒப்புதலும், பினாமி பெயரில் காண்டராக்ட்டும் வாங்கி விட்டார் கவுன்ஸிலர். சாலையா அது? ரெண்டு மூணு திசையில் பத்துப் பத்துக் கிலோ மீட்டருக்குக் கல்உப்பு





மாதிரி உதிரிஉதிரியாகக் கல்லும் செம்மண்ணும் ரப்பீஸுமாய்க் கலந்தடித்துத் தார் தெளித்துப் போடப்பட்ட ரோடு அது.

'கூடமாட இருந்து கவனிச்சுக்க சின்ராசு. அங்க இங்க கருங்கல்லுல தாரு தெளிச்சுவுடு. ஒருத்தனும் பல்லுப் போட்டு கேள்வி கேக்கப்படாது.. புரியுதா என்ன சொல்லுதேன்னு..?'

'ஐயா..நீங்க கோடு போடுங்க..நா ரோடு போடறேன். விலாவாரியாச் சொல்ல வேணாங்கய்யா..'

சொன்ன மாதிரியே செய்து காட்டினான். கோவணத் துணி மாதிரி குறுகலான சாலை முளைத்தது. ஒருத்தனும் கேள்வி கேட்காத மாதிரி தாழாங்குப்பத்து ஆட்களைச் சரிக்கட்டினதில் சின்னராசு மேல் அவருக்கு நம்பிக்கை ஜாஸ்தியானது...

"இந்தா கைச் செலவுக்கு வச்சுக்க.. ஏம்பா.. உன் வண்டியைக் குடுத்துவுடு... சின்ராசு பெத்தவங்களைப் பாத்துட்டு வரட்டும்.."

ரெண்டாயிரம் ரூபாயை கொடுத்தார்.

இதோ...குடிசையெல்லாம் பிரியாணி.

"ஆமா..சம்பத்து காங்கல்லியே எங்கன? வந்த நேரந்தொட்டு ராணியவும் காணம்..?"

"வயசுப்பய. எளவட்டம். சம்பத்து இந்தா அந்தான்னு போயிடுவான். இந்தப் பொட்டக்குட்டி ராணி தான் காலு தங்காம காத்தா சுத்துது. காலா காலத்துல எவங் கையிலயாச்சும் புடிச்சுக் குடுக்கணும் சின்ராசு. ஒத்தக்கொத்த பொண்ணு ஆம்பளைக் கண்காணிப்பு இல்லாம கட்டுக்குள்ள வாராம சுத்துது..இம்புட்டு நேரமும் உங்கம்மாக்காரி புலம்பித் தீர்த்தா.. தலையெடுத்து அவளுக்கொரு வழிகாட்டுலே.."

இலையைத் தூர எறிந்து கை கழுவினான் இருசப்பன்.

முனியம்மா அந்தக் கோடியில் வரும்போதே வண்டியும் நாய்கள் கூட்டமுமாய்க் குடிசை வாசல் தெரிந்தது. சின்னராசு குரல் கேட்டது. "அந்த சின்ராசு வந்துட்டாம் போல..பசிக்குதும்பான். நொய்யரிசி கூட இல்லாம வெத்துக்கையிலே கஞ்சி காச்சவா? மாரியம்மா சினிமாக்குப் போயிருக்கா ஊடு பூட்டிருக்கே..என்னா பண்ணட்டும்..?"

வருத்தமும் அவளோடு துணைக்கு நடந்தது.

எல்லோரும் தின்னுங்கறி
ஆட்டுக்கறி கோழிக்கறி
தம்பிப்பய தின்னுங்கறி
சரியான அடுப்புக்கரி..

(மேற்குத்தமிழகநாட்டுப்புறவியல்

## 14

திடீரென்று பெரிய பெரிய துளியாய் மழை பிளந்து கொட்டியது. இந்த மழை நேரமில்லாத காலமில்லாத மழை. ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னால் வெள்ளமாய்ப் பெய்து குடிசையெல்லாம் நாஸ்தி பண்ணின மழைக்கு இன்னமும் பசி தீராமல் சாயங்காலம்- வானம் கிழித்துப் பெய்தது.

கோயிந்தம்மாவுக்கு ஏற்கனவே பூஞ்சை உடம்பு லேசாய்க் காற்றடித்தாலே பறந்து விடுவது மாதிரி இருப்பாள். சாலைகளைப் பெருக்கித் தூசியையும் குப்பையையும் ஜோடியாகச் சுவாசிப்பதால். ஆஸ்துமாவுக்குக் கொண்டாட்டம்தான்.

திருவல்லிக்கேணி சாலையைப் பெருக்கி விட்டுக் கிளம்பலாம் என்றதும் ... சடாரென்று மழை பிடித்துக் கொண்டது. கடற்கரை பக்கத்திலென்பதால்- நிமிஷமாய் வானம் இருண்டது. காற்றும் மழையுமாய்ச் சுழன்றடித்தது.

“மழை எப்ப நிக்க? நா எப்ப வீடு போவ? ராவுக்குத் தூங்கினாப்பலதான். இளுப்புக்கும் மளைக்கும் கொண்டாட்டந்தேன்.”

முணுமுணுத்தாள். பிளாட்பாரத்திலிருந்த ஒரு டீக்கடைக் கூரையில் தலைநனையாமல் ஒதுங்கினாள்.





மழைக்குப் பயந்து சடசடவென ஒதுங்கினவர்கள் வரவர. இவள் பின்னால் தள்ளப்பட்டாள்.

“இங்கனயாச்சும் தலைநனையல்ல. வூட்டுல எல்லா எடமும் பொத்தல் தான். வெறகுக் கட்டையக் காய வச்சிருந்தேன். செல்லிப் பொண்ணு எடுத்துச்சோ இல்லியோ..சின்னப்பொண்ணு வேலைக்குப் போயிருக்குமா? இந்தப் பேய் மழைல பொணம் எரிக்கவா முடியும்? பாவம் அவ.. அப்பங்காரன் புத்திப் பேதலிச்சுப் போனதுக்கு. இவளாக் கண்டு தோள்ல தாங்குதா....”

- புகையிலையைக் கிள்ளி வாயில் அதக்கினாள். காரமாய்ச் சாறு உள்ளே இறங்கியது. மழைக்குச் சுகமாயிருந்தது. பசித்த வயிறின் முணுமுணுப்புக்கு இதமாயிருந்தது. மழை இப்போதைக்கு நிற்காது போலிருந்தது.

காந்தி பிறந்த நாளாம் சிலைக்கு மாலை போடப் பெரியவர்களெல்லாம் நாளைக்கு வருகிறார்களாம். ஆபிஸில் சொல்லி அனுப்பினதால்- காலையிலிருந்து பெருக்கிச் சுத்தம் செய்து கை விண்டு போனது மாதிரி வலிக்கிறது.

ஆனாலும் ஒரு திருப்தி.

இடுப்புச் சுருக்குப் பைக்குள் ...கூலிப்பணம் காண்ட்ராக்ட்காரருக்குப் போனது போக பாதிக்குப் பாதியாவது கிடைக்கிறதே சந்தோஷந்தான்.

“கஞ்சி கூட ஆக்க வேணாம். போயி அக்கடான்னு கட்டைய சாய்ச்சா போறும்....”

- எக்கிப் பார்த்தாள் பஸ் வருகிறதா என்று.

மழையில் நனைகிறோமே என்கிற பதட்டமேயில்லாமல் தாவணியைத் தலையில் ரெண்டு பேருக்குமாய்ப் போட்டு ராணியும் கருப்பனும் வருவது தெரிந்தது.

சினிமா மாதிரி சிரித்துப் பேசிப் பூரிப்போடு நெருக்கமாக வந்து டீக்கடையில் ஒண்டினார்கள். தெரிந்தவர்கள் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்கிற நம்பிக்கையோ என்னவோ...

“ப்ச..புடிக்கவேயில்ல ராணி...”

“ என்னது புடிக்கல்ல?”

" இப்பவே ஊட்டுக்குப் போறது தான் புடிக்கல. சினிமா ஹோட்டலு இன்னம் கொஞ்சம் பீச்சுல உக்காந்திருக்கலாம்."

"அய்ய...ஆச தோச அப்பள வடை...இம்மா நேரம் படகு சிலுமிஷம் பண்ணது பத்தலியா? காலைல கௌம்பினது. மழை கொட்டி இருட்டிக்கினு வருது. இப்பவும் ஊடு திரும்பலேன்னா அம்மா... நாரசாரமா பேசும்."

" எனக்காகத் திட்டு வாங்கமாட்டியா?"

" ம்...திட்டு வாங்கலாம்..பயப்படறது அதுக்கில்ல. நாளைக்கு வெளில வுட மாட்டா. அப்புறம்..பாக்கலேன்னா உசிரு போற மாதிரி இருக்கும்."

பதிலைக் கேட்டு உருகியே போனான்.

"என்னா கரிசனம் ராணி...இப்பவே உன்னைக் கண்ணாலம் கட்டி பொத்திக் காபந்து பண்ணணும்னு இருக்கு.."

கோயிந்தம்மாவுக்குக் காதில் ஈயம் காய்ச்சி ஊற்றின மாதிரி எரிந்தது.

'இந்த ராணி என்னா..கவுரதைய நாறடிக்கறா..? ஊட்டுக்கு இது தெரியுமா? நாத்தனார்க்காரிக்குத் தெரிஞ்சா குடலைப் பொளந்து பொலி போட்டுருவாளே..நானே வாய் தவறி ஏதோ தப்பா தரங்கெட்டுப் பேசிட்டேன்னுதான...இதுநா வரைக்கும் முகம் குடுத்துப் பேசாம இருக்கா இவ அம்மாக்காரி. இந்தச் சிறுக்கி இப்படி ஊரு மேஞ்சா...அருவாதான பேசும்.'

ஒட்டியிருந்த கொஞ்ச நஞ்ச பாசத்தில் கோயிந்தம்மா நாலையும் யோசித்துப் பார்த்தாள்.

சர்ரென்று மழை நீரை வீசியடித்து வந்து நின்ற பஸ்ஸில் தாவி ஏறினார்கள் ராணியும் கருப்பனும். ஒருவர் மடியில் ஒருவர் உட்காருவது மாதிரி ஆண்கள் இருக்கையில் உட்கார்ந்தார்கள்.

"மூணு தாளாங்குப்பம்..." டிக்கெட் வாங்கி அவர்களிடம் நீட்டி விட்டு ஒன்றுமே பேசாமல் பெண்கள் இருக்கையில் உட்கார்ந்தாள் கோயிந்தம்மா. அதிர்ச்சியில் உறைந்தே போனார்கள் இரண்டு பேரும். மழை ஜாஸ்தியாய் வீசியடித்தது.





"சீமெண்ண ஒரு சொட்டு இல்ல ஊட்டுல.. இருந்தா ஒரேயடியா அபிசேகம் செஞ்சு..தீக்குச்சி கிளிச்சுடுவேன். ஒரே முட்டாப் போயிடு மூதேவி..மொளைச்சு மூணு எல வுடல. பயாஸ் கோப்பு காட்டுதியா? தட்டுவாணிச் சிறுக்கி. த்தூ. உப்புப் போட்டுத்தான திங்கற? கொளுப்பெடுத்து அலையறியே நாயி. பொட்ட நாயி..மாரியம்மா சொல்லுது. சினிமாக் கொட்டையிலே எல்லாரும் ஒங்களைத்தான..வேடிக்கை பாத்தாளுகளாம்? தட்டிக் கேக்க ஆம்பளை இல்லன்னு தறிகெட்டு ஆடுதியா? ம்? வெளக்குமாறு பிஞ்சிடும்..தேவடியா முண்ட."

துடைப்பத்தால் அடிஅடியென்று பின்னினாள் முனியம்மா. வெளியே பெய்த மழையின் சத்தத்தையும் மீறிக் குரல் கேட்டது.

"பட்டினி கெடந்தாலும் நம்ம பேரு வெளில நாறாதுடி.. பெரிய மனுஷி ஆன நாள்லேலிருந்து உன் காலு ஊட்டுல தங்குதா? கண்ணு மையி..வளையலு..ரிப்பனு..பொட்டுன்னு மினுக்கற..சரி சின்னப்பொண்ணு தானேன்னு விட்டா..இப்பவே புருஷன் தேடுதியா? காலை முறிச்சிடுவேன் ஜாக்கிரதை."

முதுகில் மொத்தினாள். அத்தனை அடிக்கும் அழுத்தமாய் கல்லுளி மங்கனாய் நின்றாள் ராணி. ஒரு சொட்டுக் கண்ணீரில்லை. ஒரு துளி வலியில்லை. ஒவ்வொரு அடிக்கும் கருப்பனை நினைத்துக் கொள்ள, வேதனை தெரியவில்லை. அவள் பார்த்த சினிமாவில் கூட இப்படித்தானே? காதலை எதிர்த்த பெற்றோரைக் கதாநாயகி எத்தனை தைரியமாய் எதிர்த்தாள்? எந்த அம்மாவும் எடுத்த உடனே காதலை ஒத்துக்கொள்ள மாட்டாள் என்று தானே காட்டினார்கள்? உதட்டைக் கடித்துக் கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள் ராணி.

சின்னராசு தந்த பிரியாணியை வயிறு முட்டத் தின்று ஓர் உறையும் கிழித்து ஊற்றிக் கொண்டு கோணிப்படுதாவால் மூடிக் குடிசையின் மூலையில் சுருண்டு சுகமாய்த் தூங்கினதில் தாத்தாவுக்கும் இருசப்பனுக்கும் உலகமே மறந்து போயிருந்தது. சம்பத்து போய் விட்டான் சுடுகாட்டில் சோலிஎன்று. சுரேசு வழக்கம் போல எதுவுமே மனசில் பதியாமல்--மழையா வெயிலா தங்கச்சியா அம்மாவா எதுவுமே அடையாளம் காணாமல்.

"சின்னராசுகிட்டச் சொல்லி சட்டுப்புட்டுன்னு மாப்பிள்ளை தேடச் சொல்லுதேன். கருப்பன்லாம் ஆம்பளைலே சேத்தியாடி? ஒரு வாய்க் கஞ்சி ஊத்த வக்கில்லாத பிச்சைக்கார நாயி. அனாதைப்பய..அதான் ஊர் மேயறான்.."

ராணியின் குடுமியைப் பிடித்து உலுக்கினாள் முனியம்மா. கோபத்திலும் ஆத்திரத்திலும் அவள் உடம்பு வெடவெடவென்று ஆடியது.

மாரியம்மாவை நினைக்க நினைக்க ஆத்திரமாய் வந்தது. ராணி கோள்மூட்டி போட்டுக் கொடுக்கும் பன்னாடை. சினிமாவுக்கு அவள் வந்தாளா? யார் கண்டது? சினிமாவையோ வந்தவர்களையோ யார் கண்டது? பஸ்ஸில் கோயிந்தம்மாவும் பார்த்தாளே?.. அது பரவாயில்லை. பேச்சு வார்த்தை இல்லாமல் அவள் வந்து கோள் சொல்ல மாட்டாள். அடியெல்லாம் வாங்கிக் கொண்டு மனசில் பலதும் நினைத்தாள் ராணி.

“அடப்பாவி மவனே.நடக்கறது எதுவுமே தெரியாம பொணமாட்டம் கெடக்கியே.அண்ணங்காரனுவ தலையெடுத்து நாட்டாமை பண்ணா இந்த தறுதலைச் சிறுக்கி இப்படி ஆட்டங்காட்டுமா..? இந்தக் குச்சுக்குள்ள முடங்கியிருக்கியே..போ..செத்துத் தொலைங்கடா எல்லாருமா.. தாத்தா.. அப்பன் மவன் எல்லாருமாப் போய்ச் சேருங்க..எங்கவலையக் கேக்க நாதியில்ல கண்ணீரு தொடைக்க நாதியில்ல..ஏன்லா கெடக்கீங்க அல்லாரும்? இந்த பொட்டச்சி ஊர்மேய ஆரம்பிச்சிட்டா..இந்தக் கண்றாவியெல்லாம் கண் கொண்டு காங்கணுமா நானு..? எஞ்சாமி என்னைக் கொண்டு போயிடு..”

ஆற்றாமையால் சுரேசுவையும் மொத்தினாள் முனியம்மா. மாரடித்து அழுதாள். அடியும், ஆத்தாவின் கண்ணீரும் புரியாமல் பரப்பிரும்மமாய் இருந்தான் சுரேசு. ஒவ்வொரு திட்டும் ராணியைப் பாறையாய் இறுக்கின. முனியம்மாவுக்குத் துணையாய் மழையும் குடிசைக்குள் ஒழுகியது.

சுடுகாட்டு ஆபிஸ் படியில் கன்னத்தை முட்டியில் முட்டுக் கொடுத்து உட்கார்ந்திருந்தாள் சின்னப் பொண்ணு.

கண்ணெல்லாம் கவலை.

“மழை எப்ப நிக்க? சோலிய எப்ப ஆரம்பிக்க?” முடித்தாலாவது கையில் ஏதாவது கூலி கிடைக்குமே என்கிற நம்பிக்கை.

கிழக்கு மூலையில் முணுக்முணுக்கென்று விளக்கு எரிந்தது. அலுவலகத்திலும் வேறுயாருமில்லை. அதிகாரி மணிமாறன் சேதியைச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார். மனைவியோடு சினிமாவுக்குப் போகிறாராம்.

மழை நிற்கவில்லை என்றால் நாளைக்குத்தான் வந்து எரிக்க முடியும். நல்லவேளை அனைதைப் பொணம்தான். பால் ஊற்று. சடங்கு, சாம்பல்





சேர்த்துத் தருவது என்ற அவசரமில்லை. எரித்து முடித்தால் போதும். வேலையை முடித்தால். கஞ்சிக்குக் கூலி கிடைக்கும்.

ஒரு வாரமாய்ச் சடலம் ஏதும் வராததால் கூலி கைக்குக் கிடைக்கவில்லை. எரிக்க ஏதும் வரா விட்டால் என்ன? வயிற்றில் பசிநெருப்பு சுட்டெரிக்கிறதே..

மத்தியானம் ரெண்டு சொம்புத் தண்ணீரைக் குடித்துக் கிளம்பி வந்தாள். மூணு மணி போல ரயில்வே பாடி ரெண்டும் ஆஸ்பத்திரி சடலமும் வந்து சேர்ந்தன. செத்து எத்தனை நாளாயிற்றோ? நாற்றம் குடலைப் புரட்டியது. மூக்கில் கைக்குட்டை கட்டின போலீஸ்காரர்களுக்கும் ரயில்வே ஆட்களுக்குமே தலைசுற்றி மயக்கமாய் வந்தது. கிறங்கிப் போனார்கள்.

“நீ எப்படிம்மா.இந்தக் கண்றாவிய எரிக்கப் போற? ஆம்பளையாளுக யாருமில்லையா..?”

“ம்ஹூம். நா முடிச்சுடுவேங்க. பழக்கந்தான்..”

“பொம்பளைப் புள்ளைக்கி ஏன் இந்த நாறத் தொழிலு? சரி கௌம்பறோம். இன்னுங் கொஞ்சம் நின்னா எங்களைத்தான் எரிக்க வேண்டியிருக்கம்..”

விழுந்தடித்து ஓடி விட்டார்கள்.

அப்போது ஆரம்பித்த மழை தான். இன்னமும் கொட்டுகிறது. ஒரு நாளும் இல்லாமல் இன்றைக்கு வேதனை ஜாஸ்தியாயிருந்தது. வெறுப்பாயிருந்தது.. “ச்சீ. இதென்ன பொழப்பு” என்று வேதனையாயிருந்தது.

“யாரும் மண்டையப் போடலேன்னா குடும்பத்தோட பட்டினிதான் கெடக்கணும்னா கேவலம். இந்தச் சுடுகாட்டுலேயே மாசச் சம்பளம் போட்டுக் குடுத்தா ராவாப்பகலாக் கூட வேலை பண்ணலாம். வேலைக்குக் கூலின்னாத் தான் கஷ்டம். சோலி இல்லாத நாள்ல வவுத்துல ஈரத்துணியவா போட்டுக்க முடியும்? எத்தனையோ தரம் ஆபீஸருங்களுக்கு மனு எளுதிக் குடுத்தாச்சு. யாருமே நல்லது பண்ண மாட்டேங்கறாங்க..இந்தச் சுடுகாட்டுலேயே நானும் எரிஞ்சு சாம்பலாக வேண்டியது தான்.”

துணைக்கு யாருமில்லாமல் - மழையைப் பார்த்துத் தனக்குத் தானே பேசினாள் சின்னப்பொண்ணு.

இரும்புக் கிராதிக் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. கண்ணை சுருக்கிப் பார்த்தாள். சம்பத்து சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு வருவது தெரிந்தது.

"அடடா.. சம்பத்து வராம இருந்திருக்கலாமே. மழை நிக்கட்டே நாளைக்குப் பார்த்துக்கலாமில்ல..?

"என்ன இடிமழைன்னாலும் நீங்க டேட்டிக்கு வந்திடுவீங்க. எனக்காவது காத்திருப்பீங்களே..அதான்.."

குச்சிக் குச்சியான கையும் காலுமாய் இருந்தான் சம்பத்து. குளிரில் வெடவெடத்தான். பல் கிட்டித்து ஆடியது. முளைத்தும் முளைக்காமல் மீசை. சின்ராசுவின் சாடை இவனுக்கு.

"ஆஸ்பத்திரி, போலீஸ் பாடி வந்துருக்கு.."

"ப்ச...வெறும் பொணத்தக் கூட நிமிசமா எரிக்கலாம். இதை எரிக்கறதுக்குள்ளே உசிரே போயிடும்.."

சின்னப்பொண்ணு மாதிரியே அவனும் புலம்பினான்.

"அம்மாக்காரி கஸ்டப்படறா. வூட்டுல மணி அரிசி இல்ல சீமெண்ணை இல்ல. எம்மா நேரந்தான் பச்சத் தண்ணி குடிக்க.? நாய் மாதிரி நக்கித் திங்கற பொழைப்பா இருக்கு நம்மளுது. ரெண்டெளுத்துப் படிச்சிருந்தாவுட்டு கவுரதையாப் பொளைக்கலாம். எரி கூலி-பத்து ரூவா ஜாஸ்தியாப் போட்டு தர மாட்டேங்கறானுவ ஆபீஸ்ல. மாச சம்பளமும் இல்ல. குப்பம் குப்பமா ரோடு போடுது. திங்க சோறு இல்ல. தாரு போடறானுவ கவன்மெண்டுல.."

"அப்பத்தான அவனுக திங்கமுடியும்.."

"அதான் சின்ராசுண்ணே இது வேணாமுன்னு ஒரேமுட்டா ஓடுது. நானும் அண்ணங் கூடவே ஒட்டிக்கலாமா?ன்னு பாக்கேன். சுரேசு மாதிரி திண்ணைல சமாதியாயிடக் கூடாது."

.. நாலும் யோசித்துப் பேசினான். இந்த வயசுக்குள் எத்தனை இழப்புகளைப் பார்த்திருக்கிறான். தாத்தா அப்பா அண்ணன் என்று எல்லோருமே சுடுகாட்டு வேலையால் நடைப்பிணமானவர்கள் தானே.

"முன்ன பின்னன்னாலும் மொடமொடன்னு நாலு காசு பாக்கலாம்.. கவன்மெண்டு வேலையெல்லாம் அரசியல்ல இருக்கவனுகதான பினாமில வாங்கிடறானுவ..அதான் அங்க எவங்கூடவாச்சும் ஒட்டிக்கலாமான்னு பாக்கேன். பொணம் எரிச்சு நாலு வெஞ்சனம் வச்ச சோறும் துன்ன முடியாது





நல்ல துணி மணி போட முடியாது. நாளு கௌமைல நாலு எடத்துக்குப் போய் வர முடியாது. எப்பவுமே காலியான பைதான் சட்டைல.."

"உங்கண்ணன் சௌக்கியமா? நாளாச்சு பாத்து.."

"ம்...மத்தியானம் வந்துச்சு..மொபெட்டுல வந்துச்சு. பிரியாணி வாங்கியாந்துச்சு. ரொம்ப அக்கறையா ஒங்கள விசாரிச்சுது. இது கூட அண்ணன் குடுத்ததுதான்."

ரெண்டு நூறு ரூபாயைச் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் காட்டினான் சம்பத்து.

விசாரிப்புக்கே மழைத் தண்ணீர் மாதிரி குளிர்ந்து போனாள் சின்னப்பொண்ணு. ஆனாலும் சின்னராசு வந்து பார்க்கவில்லையே என்கிற வருத்தம். மொபெட்டில் வந்ததும் ஆள் மாறிவிட்டானோ என்கிற வருத்தம். ஆனாலும் சுதாரித்துக் கொண்டாள்.

"ஓங்கண்ணனாச்சும் நல்ல படியா வரட்டும்"

மனசு முழுவதும் சின்னராசுவை நினைத்துச் சொன்னாள்.

"மளை நிக்கற பாடில்ல..நின்னாக்கூட ராவுக்குள் எரிக்க முடியாது. குளிர்க்காத்துல நெருப்புப் பத்திக்காது. வறட்டிதான் அனாவசியமா ஜாஸ்தியாவும்....கௌம்பலாம் வா சம்பத்து."

இருட்டை- வாழ்க்கையிலும் பழக்கப்படுத்தி நடந்தார்கள் ரெண்டு பேரும்.

பூவுதிரப் – பிஞ்சுதிரப்
பொருக்கெனவே மொட்டுதிரக்
காயும் பழமும்
கலந்துதிர வேணுமின்னு
தினம் பிறப்பார்
ஆயிரம் பேர்
தினம் இறப்பார்
ஆயிரம் பேர்

-நாட்டுப்புறப் பாடல்

# 15

இடியும் மின்னலும் மழையுமாய் அன்றைய இரவு குடிசை முழுவதும் ஒழுகல் தான் இன்னமும். சின்ன உள்ளங்கையளவு சிம்னி விளக்கு மினுக்மினுக்கென்று காற்றுக்கும் அதன் வேகத்துக்குமாக அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஈர விறகு- கஞ்சி காய்ச்ச முடியாத மாதிரி கண்ணீரைக் காய்ச்சியது.

“அங்கன யாருமே இல்லயாடி? அவளை அதட்டி உக்கார வைக்க? ம்..? கொளுப்பெடுத்து அலையறாளே...பன்னிப் பொறப்பு.. அவுக பொல்லாப்பு நமக்கெதுக்குன்னு விட்டுத் தொலைக்கவும் மனசு வரல்ல..விட்ட குறை தொட்ட குறையாத் தட்டிக் கேக்க வேண்டியிருக்கு. அவுக வூட்டு ஆம்பளைகளுக்கு வெவரம் தெரியாதா?”

“ப்ச..பெருசுங்க ரெண்டும் திண்ணைல முடங்கிப் போச்சு...அண்ணங்காரரு..கவுன்ஸிலரு கூடவே போனாவுட்டு இவளுக்குத் துளுத்துடுச்சும்மா... அம்மாக்காரி கையாலாகாதவ.. என்ன பண்ணுவா..?”

புகைந்தன அடுப்பும் வார்த்தைகளும்.





கோவிந்தம்மாவுக்கு இன்னமும் மனசே ஆறவில்லை. ஒத்தைக் கொத்தைப் பெண் குழந்தை என்று எல்லோரும் செல்லம் கொடுத்து வளர்த்தவள்..இன்று எவனுடனோ சுற்றி மேய்கிறாள். சின்னவளாய் மார்பில் போட்டு வளர்த்த பாசம், கோவிந்தம்மாவுக்கு மனசு அலைபாய்ந்தது.

ரெண்டு குத்துப் பொட்டுக்கடலை நாலு குச்சி மிளகாய் உப்பு வெள்ளைப் பூண்டு வைத்து அம்மியில் நசுக்கினாள். தனம் தட்டும் போதே வாய் ஊறியது.

“ பசிக்குதுக்கா.. காலைலேர்ந்து டீத்தண்ணிக் கூடக் குடிக்கலே...”

.....செல்லி பரபரத்தாள். பசி தாங்காது அவளுக்கு. அலுமினிய வட்டிலைத் தட்டிக் கொண்டே ‘சீக்கிரம் சீக்கிரம்’ என்று புலம்பினாள். ஒவ்வொரு இடிக்கும் மின்னலுக்கும் காதையும் கண்ணையும் சிவுக்சிவுக்கென்று மூடிக் கொண்டு அரற்றினாள். இவளின் அரற்றலோடு மழையும் அரற்றியது. ரெண்டையும் காதில் வாங்காமல் கோவிந்தம்மா ஆற்றாமையில் புலம்பினாள்.

“இப்படி அலையறாளே..நாளைக்கே கொண்டாங் குடுத்தான் வீட்டுக்குப் போனா..என்னத்தப் பண்ணுவா? நாக்குல நரம்பில்லாம ஊரே பொறம் பேசுமே...”

“ வயசு..அலையச் சொல்ற வயசு...அலையுதா..நம்ம குப்பத்து ஆளுங்களே நாறடிச்சுடுவாங்க...”

ஈர விறகு. ஈரமில்லாத மழை. ஒரு கேழ்வரகுக் கஞ்சி காய்ச்ச எரியாத அடுப்போடு நாய் படாதபாடு பட்டார்கள் அவர்கள். எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் தான் என்ன? அவர்களை மாதிரி ஏழை பாழைகளுக்கு அன்னாடங்காய்ச்சிப் பிழைப்பு தானே? அவரவர் உழைப்பு அவரவர் கஞ்சி. கடைசி மூச்சுவரை இந்தப்பாடு தானே..?

“ஆம்பளன்னு உருப்படியா நடமாடறது சம்பத்து மட்டும் தான். அவன் ஏதாச்சும் கேட்டாக் கூட...கிள்ளி வாயிலே போட்டுக்குமே ராணி.. ராங்கிக்காரி ரவுசு புடிச்சுது..சின்னதுல எம்பின்னால அலையும்..இப்பம்... பெரியமனுஷியானாவுட்டு சினிமாக்காரியாட்டம் சிலுப்புதா...”

ஒவ்வொரு வட்டியிலும் ரெண்டு கரண்டி கஞ்சியை ஊற்றினாள் சின்னப் பொண்ணு.

ஆயிரமாய் நசுங்கின அலுமினிய வட்டியில் மொளுக்கென்று விழுந்த கேவுருக் கஞ்சியைச் சூடாய் நக்கினாள் செல்லி. காரசாரமாய்த்

துவையலை நாக்கில் தடவிக் கொண்டாள்... கொட்டும் மழைக்கும் குளிருக்கும் தேவாமிர்தமாய் இருந்தது.

"சுரேசு....பித்துப் புடிச்சு திண்ணைல மொடங்கிட்டானா? இனிம சம்பத்து தான் நாலு காசு பாத்து அவளைக் கரையேத்தணும். மூத்தவரு அரசியல்ல போயாச்சு...அது நெரந்தரம் கிடையாதே.. சம்பத்து நல்ல மாதிரி. அடாவடித்தனம் தெரியாது. ரவுசு பண்ணாது. பொறுப்புத் தெரிஞ்ச புள்ளாண்டான்... ஹீம்..எல்லாம் நல்லபடியாக் கொண்டு குடுத்து இருக்குமா? இருந்தாவுட்டு இந்தப் பொம்பளப் புள்ளைங்க யாரையாச்சும் அவனுக்குக் கட்டி வைக்கலாம். இங்கனதான் எல்லாமே ஏறுக்கு மாறால்ல நடக்கு.. ஒறவுஞ் செரியில்ல ..ஒண்ணுஞ்செரியில்ல.."

கஞ்சியை உறிஞ்ச முடியாமல் மனசு கனத்தது சின்னப் பொண்ணுக்கு

"எங்காலம் இப்படியே ஓடிடும்..இதுகளை எப்படிக் கரையேத்தண்ணே புரியல்ல..அத்தைக்காரி முன்னப் பின்ன சுள்ளுன்னாக்கூட சம்பத்தை கேட்டுப்புடலாம்னு இருக்கேன். ஒத்தைச் சுமையாச்சும் குறையும். கொண்டாங்குடுத்தான்னு பொறந்தாச்சு..எப்பவோ நடந்த கதையவே நினைச்சுட்டு.. முறைமாப்புள்ளையக் கைதவற விட்டுறலாமா? என்னம்மா சொல்லுத?"

"எனக்கென்னாடி தெரியுது? உங்கப்பன் ஓடிட்டப்பறம் நீதான் எல்லாத்துக்கும் பஞ்சாயத்து. மக்க மனுசங்களை நீ தான் சமாளிக்கணும். இந்தக் குட்டிங்களைக் கரையேத்தணும். இந்த வயசுல..நா போயி சம்பந்தம் பேசவாங்காட்டியும்? நீயே பார்த்துப் பண்ணு.."

லோட்டாவில் மிச்சமிருந்த கஞ்சியை வழித்துக் கை வழுக்காய் வாயில் ஊற்றிக் கொண்டாள் கோவிந்தம்மா. கிட்டத்தட்ட அஞ்சு நாள் பட்டினிக்கப்புறம் கிடைத்திருக்கும் கஞ்சி குடித்ததில் உயிரே ரொம்பி விட்டது.

"ப்ச..வுடுக்கா..நம்ம வூட்டுல மட்டும் நல்லது எதுவுமே நடக்கக் கூடாதுன்னு சாபம் போலிருக்கு..கொடுப்பினை சிரிக்கறதுக்கும் வேணுமில்லா? விடிஞ்ச நாளுக்குக் கஞ்சி கெடைச்சாப் போறும்னு இருக்கு. கண்ணாலம் கருமாதில்லாம் வேணாம்க்கா...என்ன தனம்? அதான?"

"ம். இப்படியே காலத்தை ஓட்டிட்டா நிம்மதி. குப்பை அள்ள ஆளு எடுக்காவளாம்..போயிடலாம். அக்கா மாதிரி பொணம் பொரட்ட வேணாம்.





இதுவும் நாரத் தொளிலுதான். ஆனா, மழை வெயிலுன்னு காணாம பொணம் எரிக்கற கொடுமை கெடையாதில்ல?"

ஒருவரையொருவர் மிஞ்சும்படி எலும்பும் தோலுமாய் ஒல்லியாயிருந்த செல்வியும் தனமும் பொங்கின அழுகையையும் எரிச்சலையும் முந்தானையால் துடைத்து மூக்கைச் சிந்தினார்கள். கோணியில் உடம்பைச் சுருக்கி ஒண்டிக் கொண்டார்கள். கோணியில் சணல் சுருக்சுருக் கென்று குத்தினால் கூடக் குளிருக்கு இதமாய்ப் பதமாய் இருந்தது. சீமெண்ணைய் தீர்ந்து போய் சிம்னி விளக்கு அணைந்து விட்டது. மின்னலான வெளிச்சம் அவ்வப்போது கூரையில். என்னன்னவோ பாடு பேசினார்கள். இடியும் மழையும் கூடவே பேசியது.

மனிதன் என்னதான் கணக்குப் போட்டாலும் விடையை எழுதுபவன் மேலே இருப்பவன்தானே? அவனின் விருப்பம் அவனின் திட்டம் அவனின் இஷ்டத்துக்குத்தானே விஷயங்களை நடத்தி முடிக்கிறான். காலையில் மழை நின்று விட்டது. ஆனாலும் சாலையெல்லாம் சேற்றுக் குழம்பு. தாழாங்குப்பத்துச் சாலையிலிருந்த ஜல்லியெல்லாம் பிய்த்துக் கொண்டு சேற்றுக் குழம்பானது. சாலையின் மேடு பள்ளம் சாக்கடைக் குழி எல்லாவற்றையும் ஓர் அனுமானத்திலேயே தாவித் தாண்டிக் குதித்து நடந்தாள் சின்னப்பொண்ணு. விடுவிடுவென்று நடையில் வேகம். நேற்று முடிக்காத வேலையை இன்று முடிக்கா விட்டால் அலுவலர் மணிமாறன் நாக்கைப் பிடுங்கிக் கொள்வது மாதிரி கேட்பார். 'அவர்ட்ட பேச்சு கேக்கறதை த விட நாண்டுக்கிட்டு சாவலாம்.'

மற்ற பிணங்களை எரிப்பதை விடவும் அனாதைப் பிணங்களை எரிக்கும் போது தான் அவளுக்குக் கண்ணீர் பெருகும். 'யாரு பெத்த புள்ளையோ? யாரைப் புள்ளையாப் பெத்தியோ? சாதிசனம் யாருமில்லாம எங்கையால கொள்ளி வாங்கற...போன ஜென்மத்துக் கடன் போலிருக்கு. நல்லபடியாப் போய்ச் சேரு இந்த ஜென்மத்துக்கு.'

இப்படியெல்லாம் மனசுக்குள் வேண்டிக் கொள்வாள். புதிதாய்ச் சுடுகாட்டில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்டதில் நின்று வேலை செய்ய முடிகிறது.மழை வெயில் பாராமல்.

சுற்றியிருக்கும் மண்ணை வெட்டி எடுத்தாள். ஏற்கனவே மழையில் சாந்தாய்க் குழைந்திருந்த மண்ணைப் பாத்தி மாதிரி பூசினாள். மண் புழுக்களோடு வழிந்தது. நாற்றம் குடலைப் புரட்டிப் போட்டது. வரட்டிகளையும் நெருக்கமாய் அடுக்கி நெருப்பிட்டாள்.

'ஒரு குண்டு விறகு போறுமான்னு தெரியல. மழை ஈரம் வேற அடுப்பை விட மோசமா எரியுது. சம்பத்து வந்தா பக்கத்துலேயே ஆளு வெட்டச் சொல்லலாம். பொதைக்க வேண்டியதும் இருக்கு.'

மனசு பலதும் நினைத்தபடியிருக்க..கைபாட்டுக்கு வேலை செய்தது. மூட்டை அடுக்கி மண்மெத்திப் பரபரவென்று சோலியை முடிக்கப் பார்த்தாள் சின்னப்பொண்ணு. மறுபடியும் மழை வந்து காரியத்தைக் கெடுப்பதற்குள் மிச்ச மீதியெல்லாம் எரித்தாக வேண்டும். துர்நாற்றமும் கெட்ட வாயுவுமாய் மண்ணிலிருந்து கிளம்பியதில் அவளுக்குக் கிறக்கமாய் வந்தது. ஆனாலும் சுணங்கவில்லை. கையிலிருந்த வெட்டிக் கம்பால் தெறித்த உடம்பை ஜாக்கிரதையாக அமுக்கித் திணித்தாள். ஆஸ்பத்திரி சடலங்களுக்குள்ளே உப்பும் பாட்டில்களும் கூட வைத்துத் தைத்து அனுப்பி விடுவார்கள். பிணத்தை எரிக்கும் போது எதிர்பாராமல் பாட்டில் வெடிக்கும் அபாயம் உண்டென்பதால்- ரொம்பவே முன்னெச்செரிக்கையாய் இருப்பாள். தள்ளி நின்றே புரட்டிப் போட்டாலும் கூடத் தீயின் வெப்பம் அவளைத் தகித்தது. உயிரோடு எரித்தது.

என்னமோ தெரியவில்லை. நினைக்க நினைக்க அழுகையாய்த் தான் வந்தது இன்றைக்கு.

'இன்னம் எத்தனை காலத்துக்கு இப்படி நரகலும் அழுகலும் நெருப்பும் பொணமுமாய்ப் பாடுபட? யாராச்சும் மண்டையப் போட மாட்டாகளா? பொணம் வராதா? வூட்டுல அடுப்பெரிக்கலாமே..இப்பிடிக் கேவலமாவா எதிர் பார்க்க? பசியும் பட்டினியுமே என்னைத் தின்னுத் தீர்த்துடுமோ? சோறுல கை நனைக்கப் பொணம் விழணும்னு நினைச்சா மனசுல ஈரமில்லன்னு ஆயிடுமே..மத்தவன் சாவுக்காகக் காத்திருக்கற மிருகப் பொறப்பா நானு? மத்த வெட்டியானுக..நல்ல பொணத்தையெல்லாம் புடுங்கிக்கறானுவ. உறவு ஜனத்துக்கிட்ட..வாய்க்கரிசின்னு காசு புடுங்கிக்கறாங்க..எனக்கு மட்டும் போலீஸு கேஸு..ரயில் பாடி ஆக்ஸிடெண்டு கேஸு மார்ச்சுவரி கேஸுன்ன தள்ளி விடறானுங்க. அது கூட நெதமுமா கெடைக்குது? இந்த அனாதைப் பொணங்களை எரிச்சதுக்கு வாய்க்கரிசி யாருகிட்ட கேக்க? சல்லாத் துணி யாரு போடுவா? அனாதைப் பொணத்தால டீக்குக் கூட காசு பெயரமாட்டேங்குது.அவனவன் குடிச்சுப்புட்டுத்தான் பொணம் எரிக்க வரானுவ. சாராய நாத்தத்தை விடச் சவநாத்தம் பரவாயிலேன்னு அதையும் நானு தொடரதில்ல. ஆனாலும் ஒத்தப் பைசா இல்ல கைல. நானு சவக்குழில உக்காந்து எரியற வரைக்கும் இப்பிடித்தான்னா என்ன பண்ண? சின்ராசும் கவுன்ஸிலரு கூட ஒட்டிக்கிட்டு





வேற பாதைல போயாச்சு. கைல நாலு காசு பாத்து வெள்ளையும் சள்ளையுமா ஆளுங்களைக் கண்டுட்டா நம்ம நெனப்பெல்லாம் மறந்துடும். இனிமயும் அவுகளை நெனச்சுக் கனாக்காண வேணாம். தங்கச்சிங்களைக் கரையேத்த வழியப் பார்க்கோணும். அம்மாக்காரிக்கு ஒரு வேளை கஞ்சி வருஷத்துக்கொரு புடவைன்னு தேத்தப் பாக்கோணும். இனிம சுணக்கமே கூடாது.'

அவ்வளவு தூரம்..மொபெட்டில்- சின்னராசு குப்பம் பக்கம் வந்தும் தன்னை வந்து பார்க்கவில்லையே..என்ற ஏக்கம் இன்னும் மனசுக்குள் குமைந்தது. பலதும நினைக்கத் தோன்றியது. வெட்டிக் கம்பால் புரட்டிப் புரட்டிப் போட்டாள். கால் ரெண்டும் விண்டு போனது..மணிக்கணக்காய் நின்றதில். மற்ற நாளில் கூடப் பரவாயில்லை. தீட்டு நாளில் தான் வயிற்று வலியும் மூட்டு வலியும் உயிரையே பிசைந்தாலும் கூட வேறு வழியில்லாமல் பிணம் எரிக்க வேண்டியிருக்கும். ஞாயிற்றுக் கிழமை என்றால் போச்சு ராகுகாலம் எமகண்டம் முடிந்து சடலம் வர ராத்திரி ஏழு மணிக்கு மேலாகிவிடும். 'இப்ப எடுத்தாந்தா என்ன பண்ண? நா வூட்டுக்குப் போக வேணாமா?' இப்படிக் கேட்க முடியாது. இருந்து சோலியை முடிக்க ராத்திரி ரெண்டு மூணு கூட ஆகிவிடும்...மறுநாள் சாம்பல் எடுக்க வரும் போது, வெந்தும் வேகாமலும் அள்ளித் தர முடியுமா? மனசாட்சிக்கு விரோதமில்லாமல் முழுசும் எரித்த பிறகு தான் வீட்டுக்குப் போவாள் சின்னப்பொண்ணு.

'ஆனா..இன்னம் எத்தினி நாளுக்கு? உடம்புல வலு இருக்கற வரைக்கும் இருவது மணி நேரம் நிக்கலாம்? சரி அப்பறம்? ஒடம்பு தேஞ்சுடுமே இன்னம் கொஞ்ச நாள்ல? அதுக்குள்ளாற வேற வேலை பாக்கவா? கெடைக்குமா? இந்த வேலைய ஆபிஸருங்க நெரந்தரமாக்கிட்டாக் கூடப் பரவாயில்ல..மாசா-மாசம் சம்பளம் பாக்கலாம். உடம்பு நோவு பத்திக் கவலைப்படாம வேலை பண்ணலாம்..பாட்டன்...முப்பாட்டன் காலத்துலேர்ந்து...பொணம் விழுந்தாத்தான் வெட்டியானுக்குக் காசு? என்னை மாதிரி நாத்தப் பொறப்புக்குக் கவலைப்பட யாரு இருக்கா? குப்பை அள்ளறவங்களைக் கூட. பொது ஜனம் நெதமும் நெனைக்கும். என்னை மாதிரி வெட்டியானை உசிரோட இருக்கப்ப நினைக்கவே தோணாதே.. எங்க பொழைப்பே திரிசங்கு சொர்க்கந்தேன்...'

சின்னப்பொண்ணு என்றைக்குமில்லாத அதிசயமாக அதிகாலையிலேயே உற்சாகமிழந்து லேசான முகவாட்டத்துடன் மனசு உலர்வுடன் 'இனி என்ன?' என்பதை நினைத்தபடி வேலையாயிருந்தாள்.

அந்தச் சிதை நெருப்பு காலம் காலமாய் யுகம் யுகமாய்ச் செய்வது மாதிரி அதுபாட்டுக்குத் தன் சோலியைச் செய்து கொண்டிருந்தது. வாழ்க்கையைப் புரட்டிப் புரட்டிப் போட்டுத் தகனம் செய்துதானே இத்தனை காலமாய் உலகம் ஜீவித்துக் கொண்டிருக்கிறது.

"என்னடா மணி? என்னத்துக்கு இப்படி ஓடியாற? இன்னிக்கு முச்சூடும் அனாதைப் பொணம்தான்டா. காக்கா பலகாரம் கெடைக்காது. சல்லாத் துணி பெயராது. வாய்க்கரிசியும் அம்பேல்தான்..."

நைந்த புடவையால் முகத்தின் வியர்வையை வழித்துப் போட்டாள் சின்னப்பொண்ணு. மழை குறைந்ததில் காற்று வீசாமல் இறுக்கமாகிப் புழுங்கியது. நெருப்பின் சூடும் சேர்ந்து நரம்புகள் கூட வியர்த்தன.

"ப்ச.அத்த வுடுக்கா. சோலி முடிஞ்சுதா?"

"இது எப்ப முடிய? ஊழித் தீ எரியற காலம் வரைக்கும் முடியாத சோலி தானே? நேரமாவும், நாக்கு வழவழன்னுது. கொஞ்சம் பாத்துக்கோயேன். ஒரு டீ குடிச்சுட்டு வரேன். கிறுகிறுப்பா வருது மணி..."

"இதைக் கேளு. இன்னம் கேராயிடுவ. உங்க ஆத்தா. நா பாக்கத்தான் ரோடுல நடந்துச்சு. திடீர்னு பாத்தாக்க ஆளைக் காணம் மாயமா மறைஞ்சுடுச்சு..."

"என்னடா உளர்ற?"

"சாக்கடைக் குழி..திறந்தாப்பல இருந்துச்சா..மழைத் தண்ணில தெரியல..... தெரியாம அதுல விழுந்து நிமிஷமா வெள்ளத்துல உருட்டி அடிச்சிட்டுப் போயிடுச்சு..மெல்லிசா இருக்குமில்ல உங்க ஆத்தா?. சாக்கடைத் தண்ணிக்குள்ள நிமிஷமா மூழ்கிடுச்சு..தேடிப் பார்த்தாச்சு. சாக்கடைக்குள்ளாறயும் வெள்ளம் ஓடுதில்ல...எங்கனயும் காங்கல்ல" பதைபதைத்தான் மணி..

ரெண்டு குண்டு விறகும் தன் தலை மேல் எரிவதாய்த் துடித்துப் போனாள் சின்னப்பொண்ணு.



**செத்த பிணம் சிவலோகம் போக..டும்**
**மாண்ட பிணம் வைகுந்தம் போக– டும்**
**காளியே! கதவைத் திற! டும்**
**அரிச்சந்திரா! வழிவிடு! டும்**

–அரிச்சந்திர புராணம்

# 16

அப்பனும் நிமிஷமாய்க் காணாமல் போனான். ஆத்தாளும் பார்த்த வாக்கிலேயே மந்திரமாய் மறைந்து விட்டாள். உயிரோடு பறி கொடுத்தல் என்பது இதுதானோ? இரும்பு மூடியில்லாமல் திறந்திருந்த சாக்கடைக் குழிக்குள் நுழைந்து கரைந்து விடுமளவுக்கு மெல்லிசானவள்தான் கோவிந்தம்மா. அதனால் ஒப்பாரி வைத்து, கட்டிப் பிடித்து, மாரடித்து அழவும், கண் வீங்கி, மூக்கு சிந்தி, மனசு ரணமாகவும், பிணமென்று எதுவுமில்லாத மரணம். சாவு. காவு.

மேளதாளத்தோடு உறவினர் கூட்டத்தோடு வந்திறங்கும் பிணங்களைத் தீமூட்டிப் புரட்டிப் போட்டு நெஞ்சுக் குழி வரை வேக வைத்துச் சாம்பல் சேர்த்துக் கொடுப்பவளுக்கு .. அம்மாக்காரியின் சாம்பல்.. அம்மாக்காரியின் எலும்பு என்றெல்லாம் எடுத்து அழ முடியாமல் போன இழப்பு. கோவிந்தம்மாவை நிமிஷமாய்ப் பறி கொடுத்தாயிற்று. சாக்கடையுள்ளேயும் வெள்ளம் சுழித்து ஓடியதால் சாக்கடை நீரும், கழிவு நீரும், வெள்ளமாய்க் கலந்த நாற்ற நீரில் ஒரு நிமிஷம் முங்கினால் கூடக் குமட்டலிலேயே உயிர் போய் விடும். இதில் வெள்ளத்தின் ஆக்ரோஷமான உருட்டல் வேறு. மழை நீர் அடித்துப் புரட்டி எந்த முகத்துவாரத்தில் அம்மாக்காரியைக் கொண்டு சேர்க்குமோ.. வெள்ளம்